விலை: 40.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 122 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 07 புதன்கிழமை (20.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## பாணின் விலை ரூ.30ஆல் உயர்வு

(கொழும்பு)
கோதுமை மா, எரிபொருள் விலைகள் அதிகரிப்பின் தொடராக வெதுப்பக உற்பத்தி 15


## மாவின் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)
கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பிரீமா நிறுவனம் 15

## உணவுப் பொதியின் விலை உயர்வு

(கொழும்பு)
உணவுப் பொருட்களின் விலைகளை 15

## எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டம்




3ஆம் பக்கம் பார்க்க



### ரம்புக்கனையில் கலவரம்

# பொலிஸாரின் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

- ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 8 பொலிஸார் உட்பட 24 பேர் காயம்.
- ரம்புக்கனையில் பொலிஸ் ஊரடங்கு அமுல்.
- அமைதியின்மையைத் தொடர்ந்து பெருமளவு பொலிஸ், இராணுவம் குவிப்பு.
- ஆர்ப்பாட்டக்காரர்கள், பொலிஸார் மீது கற்களை வீசியதோடு பவுசர் மற்றும் முச்சக்கரவண்டிக்கு தீ வைக்க முயற்சி செய்ததால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக பொலிஸ் தெரிவிப்பு.
- மனித உரிமை ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்தது. (15ஆம் பக்கம் பார்க்க)


உயிரிழந்த நபர்

## பேருந்து கட்டணங்கள் 35 சதவீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)
தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 15

## சாவகச்சேரியில் ரயில் மோதியதில் இராணுவ வீரர் பலி

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானையில் புகையிரதம் மோதி இராணுவ வீரர் ஒருவர் 15

### ஒரு வாரம் இலங்கை முடங்கலாம்

## 300க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு

(கொழும்பு)
இலங்கையில் இன்று முதல் ஒரு வார காலத்திற்கு ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நாடு முழுவதும் இன்று தொடக்கம் இவ்வாறு ஹர்த்தால் அனுஷ்டிக்கவுள்ளதாக 300இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக் 15

### ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு

## ஐ.நா, அமெரிக்கா, கனடா உட்பட பலர் கண்டனம்

(கொழும்பு)
ரம்புக்கனையில் நேற்றைய தினம் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்து மேலும் பலர் காயமடைந்த சம்பவத்திற்கு ஐ.நா. அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.
மேலும் இலங்கை 15

## 37 வகையான அத்தியாவசிய மருந்துகள் கையிருப்பில் இல்லை

### சுகாதார அமைச்சர்



(கொழும்பு)
646 அத்தியாவசிய மருந்துகளில் 37 மருந்துகள் தற்போது கையிருப்பில் இல்லை என சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 15

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
வடமாகாண பாடசாலைகளில் இன்று நடைபெறவிருந்த 6ஆம், 7ஆம், 8ஆம் தரங்களுக்கான பரீட்சைகள் ஒத்திவைக்கப்படுவதாக வட மாகாண 15

## இலங்கைக்கான உதவிகளை துரிதமாக வழங்குங்கள்


### சர்வதேச நாணய நிதியத்திடம் இந்தியா



(வோஷிங்டன்)
இலங்கைக்கான நிதி உதவிகளை துரிதமாக வழங்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 22.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் நடராசா சிவபாலதருமகுலசிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.04.2022) வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ள சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பாண்டியன் சீமா
அல்வாய் வட மேற்கு,
திக்கம், அல்வாய்.

இங்ஙனம்:-
குடும்பத்தினர்
076 467 6382

(C-4197)

---

# நெஞ்சில் நீங்காத நினைவுகளுடன் எட்டு ஆண்டுகள்



அமரர் திருமதி
## கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்

திதி-20.04.2022
(சித்திரை மாத சங்கஹடகர சதுர்த்தி)
தோற்றம்:1924.10.13 மறைவு: 2014.04.19

அன்புத் தெய்வமே ஆண்டுகள் எட்டு
போனது அம்மா. எங்களுடன் வாழ்ந்த
அழகிய நினைவுகளும் தங்கள்
அன்பும் எம்மை வழிநடத்திச்
செல்லும். தங்களை நேரில் காண
இயலாது இருப்பினும் நீங்கள்
எப்போதும் எம்முடனே வாழ்கின்றீர்கள்.

மகன் குடும்பத்தினர்
இல.140, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

(11087)

---

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

---

# ஈஸ்வரி இராஜ யோகா நிலையத்தின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழா





எமது நிலையத்தின் பழைய, புதிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்காக 24.04.2022 அன்று காலை 9.00 மணிக்கு எம்மால் வெளியிடப்பெற்ற சித்தர்கள்வழி யோகா மற்றும் உணவு மருத்துவம் என்னும் நூலிலிருந்து 30 வினாக்களுக்கு விடையளிக்கும் எழுத்துப் பரீட்சை ஒன்று நடைபெறும். அதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குச் சிறப்புப் பரிசில்களும் தகைமை அடிப்படையில் ஆறுதல் பரிசுகளுக்கு வழங்கப்படும்.

மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் **03.05.2022 செவ்வாய்க்கிழமை** அன்று பி.ப 3.00 மணிக்கு நடைபெறவிருக்கும் எமது நிலையத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும். இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அஷ்டாங்கயோகி
நாகலிங்கம் குலசிங்கம்

077 557 7517


(11078)

---

# 1 ஆம் ஆண்டு நினைவுதின ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பு

கடந்த 30.04.2021 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்
## சின்னத்துரை ஜெகநாதன்



மண்ணில்
07.12.1956

விண்ணில்
30.04.2021

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் இன்று (20.04.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி,
கம்பாமலை,
வல்வெட்டித்துறை.

(11045)


இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு எதிராக நாட்டின் பல இடங்களில் போராட்டம்

(கொழும்பு)


**நேற்றுக் காலை முதல் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு தழுவியதாக வீதி மறியல் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**











பிரதான வீதிகளை மறித்து, பேருந்துகள் உள்ளிட்ட வாகனங்களை நிறுத்தியும், ரயர்களைப் போட்டு எரித்தும் வீதி மறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு இடங்களில் அரசுக்கு எதிராக திரண்டுள்ள மக்கள் வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு, காலி, மாத்தறை, கேகாலை, ரம்புக்கனை, ஹக்குரஸ்ஸ நகர், அநுராதபுரம், காக்கப்பள்ளி சந்தி உள்ளிட்ட பல பிரதேசங்களில் பிரதான வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதான வீதிகளை மறித்து பேருந்துகளை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் பிரதான வீதிகளுடனான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## காலிமுகத்திடலில் கம்பவாரிதி அணியினர்



(கொழும்பு)

இந்து மக்கள் சார்பாக காலிமுகத்திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை கம்பன் கழக அணியினர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் தலைதூக்கியுள்ள அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக இந்து மக்கள் சார்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ்,அவர் சார்ந்த கம்பன் கழக உறுப்பினர்கள்,வெள்ளவத்தை ஐஸ்வர்ய லட்சுமி ஆலய பிரதம சிவாச்சாரியார் உள்ளிட்ட சமய பிரமுகர்கள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சிக்கு வலுச்சேர்த்திருந்தனர். (நி-4-30)

## 11 ஆவது நாளாக தொடரும் மக்கள் எழுச்சிப் போராட்டம்



(கொழும்பு)

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுள்ள மக்கள் எழுச்சிப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை 11ஆவது நாளாகவும் தொடர்கிறது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கொழும்பு காலி முகத்திடலுக்கு வருகை தந்து பொதுமக்கள் இந்தப் போராட்டத்திற்கு தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

அத்தோடு, குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு பல்கலைக்கழக மாணவர்கள், சட்டத்தரணிகள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களும் தொடர்ச்சியாக ஆதரவு வழங்கி வருகின்றனர்.

ஜனாதிபதியை பதவியில் இருந்து விலகுமாறு வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. (நி-4)

## கொழும்பிற்குள் நுழைந்த பல்லாயிரக்கணக்கான மக்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பட்லர் சதம், சஹால் ஹெட்ரிக்

# கொல்கத்தா அணியை வீழ்த்தி ராஜஸ்தான் றோயல்ஸ் வெற்றி



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 30 ஆவது லீக் போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 217 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோஸ் பட்லர் 103 ஓட்டங்களையும் சஞ்சு சம்சன் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சில், சுனில் நரைன் 2 விக்கெட்டுகளையும் சிவம் மாவி, பெட் கம்மின்ஸ் மற்றும் ரஸ்ஸல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 218 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியால், 19.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 210 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஸ்ரேயஸ் ஐயர் 85 ஓட்டங்களையும் ஆரோன் பின்ஞ் 58 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ராஜஸ்தான் அணியின் பந்துவீச்சில், யுஸ்வேந்திர சஹால் 5 விக்கெட்டுகளையும் ஒபேட் மெக்கொய் 2 விக்கெட்டுகளையும் பிரசீத் கிருஸ்ணா மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஹெட்ரிக் அடங்கலாக 5 விக்கெட்டுகளை வீழ்த்திய யுஸ்வேந்திர சஹால் தெரிவு செய்யப்பட்டார். (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2565

**கீர்த்தி**

நல்லா இருக்கிறீங்களான்னு கேட்டா இருக்கேன், இல்லைனு மட்டும் பதில் சொல்லு...




அத விட்டுட்டு ரோடுனு பாக்காம ஒரு மணி நேரமா நிக்க வச்சு சொந்தக்கதை சோகக் கதையெல்லாம் சொல்லி புலம்புறாய்... இரக்கமில்லையா உனக்கு?

**தயாளன்**




**யதுசா**




**யசோன்**

வாழ்க்கையில் விலை மதிக்க முடியாத அனுபவங்களையும் பாடங்களையும் நமக்கு கற்றுக் கொடுப்பது பள்ளிக் கூடங்களோ, கல்லூரிகளோ அல்ல. பணமில்லா வாழ்க்கையும் பசித்த வயிறும் உடைந்த மனமும் தான்



**துசி**




**நொவின்**

புருஷன் கந்த சஷ்டி கவசம் படிச்சதுக்கு அடிச்சியா லூசாடி நீ "கொள்ளிவாய் பேய்களும் குரலைப் பேய்களும்" என்று படிக்கும் போது என்னைய முறைச்சு பாத்துக்கிட்டே பத்து வாட்டி படிக்கிறாருடீ

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதே பிரச்சினைகளுக்கான குறுகியகாலத் தீர்வாகும்

## பாராளுமன்றில் பிரதமர் மகிந்த

(கொழும்பு)

20 ஆவது திருத்தத்தை நீக்கி 19 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதே பிரச்சினைகளுக்கு குறுகிய காலத் தீர்வாக இருக்கும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். நேற்று பாராளுமன்றில் ஆற்றிய விசேட உரையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

எமது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார சவால்கள் தற்போது கடினமான நிலைமைக்கு வந்துள்ளது.

மின்சாரத் துண்டிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு என்பன எமக்கு கண்ணுக்குத் தெரியும் கஷ்டங்கள் மாத்திரமே. இதனால் ஏற்பட்டுள்ள பல கஷ்டங்களையும் மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர் என்பதை நான் அறிவேன்.

இந்த நெருக்கடியில் இருந்து மீள அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலம் இது என நான் நினைக்கின்றேன். அரசியல் ரீதியாக குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் சமயம் இதுவல்ல.

இதன் காரணமாகவே ஆளும் கட்சியுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முன்வருமாறு நாங்கள் எதிர்க்கட்சியினருக்கு நேர்மையான நோக்கத்தில் அழைப்பு விடுத்தோம். அந்த அழைப்பில் தற்போதும் எந்த மாற்றமும் இல்லை.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் நாங்கள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம். அவர்களிடம் இருந்து எமக்கு சாதகமான பதில்கள் கிடைத்து வருகின்றன.

பேச்சுவார்த்தை மூலம் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு நாம் தீர்வு காண வேண்டும். காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை பேச்சுவார்த்தைக்கு வருமாறு நான் இதற்கு முன்னர் அழைப்பு விடுத்தேன்.

உடனடியாக பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பதை கூற முடியாவிட்டாலும் விரைவில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்பது முக்கியமானது.

19 ஆவது திருத்தச் சட்டத்தை காலத்திற்கேற்ற திருத்தங்களுடன் ஜனநாயக ரீதியாக நடைமுறைப்படுத்துவது குறுகிய காலத்தில் எடுக்கக் கூடிய காலத்திற்கு சிறந்த தீர்வாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

இதற்காக கட்சி பேதமின்றி அனைத்து மக்களின் ஆதரவு கிடைக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-4)

### அரசிலிருந்து விலகிய 40 எம்.பிக்களும்

# எதிர்க்கட்சியில் இணைவு

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகிய 40 சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் தாம் உள்ளிட்ட 40 பேர் எதிர்க்கட்சித் தலைவரின் குழுவல்ல என்றும் எதிர்க்கட்சியில் சுயேட்சைக் குழுவாகச் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட அறிக்கையொன்றை விடுத்து உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவையை நியமிப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என தான் நம்பவில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் உட்பட அனைவருக்கும் வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்வதாகவும் போராட்டம் நியாயமானது என்றும் சிறிசேன தெரிவித்தார். (நி-4)

# 2 மில்லியன் டொலர்களுக்கு

## விலைபோன இராஜாங்க அமைச்சர்கள்

(கொழும்பு)

2 மில்லியன் டொலர்களை வழங்கியே புதிய இராஜாங்க அமைச்சர்களை அரசாங்கம் நியமித்துள்ளது என எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

பாராளுமன்றில் நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

வீடுகளுக்குச் சென்று பாராளுமன்ற உறுப்பினர்களை விலைபேசும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக விமல் வீரவன்சவும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (நி-4)


## 1ஆம் ஆண்டு நினைவு

திருமதி. யோகரஞ்சிதம் இராஜரட்ணம்

மலர்வு 1949 . 10 . 22



உதிர்வு 2021 . 04 . 30

பருத்தித்துறை, புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் வளர்ச்சிக்காக 50 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி மறைந்த மன்றத்தின் திட்ட இணைப்பாளர் திருமதி.
**யோகரஞ்சிதம் இராஜரட்ணம்(கிளி அக்கா)**
அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் அவரை பேரன்புடன் நினைவு கூருகின்றோம். உம் வழி தொடர்ந்து கலை மன்றத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்வோம். (11062)

**நிர்வாகம், ஞானசம்பந்தர் கலைமன்றம்.**


# இராசிபலன்

20.04.2022
சித்திரை 07, புதன்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 5.17 மணிவரை

கேட்டை பின்னிரவு 2.56 மணிவரை
சுபநேரம்- 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் -12.02-1.32 மணிவரை

சந்திராஷ்டமம்- பரணி

**வளவன்**




உடல் நலனில் கவனம் தேவை, வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம்.




குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கடன் தொல்லைகள் குறையும், நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.




உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், கனவுப் பலிதமுண்டு, பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியம் சிராகும்.




செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.




உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.




பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள்,பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.




நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் பகை அகலும்.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்,வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுப விரயங்கள் கூடும்.




வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலாபகரமான நாள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள்.




வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.




திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், தடைகள் அகன்று தனவரவு அதிகரிக்கும் நாள்.

**ஒரு நல்ல நண்பன் நூறு உறவினர்களுக்குச் சமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட சதுரங்க சங்கத்தின் ஏற்பாட்டில் நொர்தேர்ன் செஸ் ப்ரீமியர் லீக் சுற்றுப்போட்டி நேற்று முன்தினமும் நேற்றும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் வீதியில் அமைந்துள்ள பூட் களரியில் இடம்பெற்றது. (படம் : சிவசாந்தன்)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஏ-9வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் குறுக்கு வீதி ஒன்றினுள் நுழைய முற்பட்ட வேளையில் மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இதில் சங்கத்தானை சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 47வயது பெண் ஒருவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (6-4-30)

# 3 வது ஆண்டு நிறைவு தினம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பாலாவோடை ஈஸ்வரி இராஜயோகா நிலையத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள், வணிக பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெறும்.' இந்நிகழ்வில் பிதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்வார். (5-4)

# கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று பிரசித்தி பெற்ற காவல் தெய்வமாகிய ஏழாலை பெரிய தம்பிரானுக்கு இன்று புதன்கிழமை இரவு பாரம்பரிய முறைப்படி கொடியேற்ற வைபவம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (5-4-26)

# 'கிளி அக்கா' எனும் ஒரு சகாப்தம்

## மறைந்தார் மாண்பு



வடமராட்சி மண்ணில் புகழ் பூத்த புலோலி கிராமத்தில் கலைகளின் இருப்பிடமாய் விளங்குவது ஞான சம்பந்தர் கலைமன்றமாகும்.

தனித்தன்மையோடு கம்பீரமாய் காட்சி அளிக்கும் இந்த மன்றத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர் 'கிளி அக்கா' என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் திருமதி.யோகரஞ்சிதம் இராஜரட்ணம் மன்றத்தின் திட்ட இணைப்பாளராக சேவையாற்றியவர். திட்டங்களை வகுப்பதிலும் அதனை செயற்படுத்துவதிலும் அவருக்கு நிகர் எவருமில்லை எனலாம். அதனால் தான் கலைகளோடு சேர்ந்து கலாசாரத்தையும் உள்ளடக்கிய ஒரு அழகிய சமூகத்தை அவரால் கட்டியெழுப்ப முடிந்தது.

முதல்வி அம்மன் ஆலயம், புவனேஸ்வரி கலை அரங்கு, வாசிகசாலை மற்றும் மூன்று மாடிக் கட்டடத்தோடு கம்பீரமாய் காட்சி அளிக்கம் ஞானசம்பந்தர் கலைமன்றம் என இவை அனைத்தும் ஒரு குறுகிய நிலப் பரப்பில் தூய்மையாகவும் அழகாகவும் மழலைகளின் மொழியாலும், கலை மணத்தாலும் நிறைந்திருக்கும் ஒரு அற்புதமான இடமாகச் காட்சி தருவதற்கு மூலகாரணம் கிளி அக்கா என்றால் அது மிகையாகாது.

ஆளுமையும் தலைமைத்துவப் பண்பும் மிக்க ஒரு இரும்புப் பெண்மணி அவர். எத்தனை உயர்ந்த பதவியில் இருப்பவர்களாயினும் கிளி அக்கா என்றால் தனிமரியாதை கொடுப்பர். ஒரு தொலைபேசி உரையாடலிலேயே நினைத்ததை முடிக்கும் ஆற்றல் நேர முகாமைத்துவத்தை அவரிடமிருந்து தான் நாம் கற்றுக் கொண்டோம்.

முதல்வி அம்மன் ஆலய பூஜைகளாக இருக்கட்டும், மன்ற நிகழ்வுகளாக இருக்கட்டும் குறித்த நேரத்தைவிட ஒரு நிமிடம் கூட பிந்தியதில்லை.

எந்த நிகழ்வையும் விருந்தோம்பல் பண்பையும் அவரிடமிருந்து தான் நாம் கற்றுக் கொண்டோம். அன்னமிடுவதில் ஒரு தாய்க்கும் நிகரானவர். குரலில் இறுக்கமும் இதயத்தில் இரக்கமும் உள்ள பெண்மணி அவர்.

கௌரவத்தையோ, புகழையோ எதிர்பாராமல் அர்ப்பணிப்போடு சேவையாற்றியவர். அரை நூற்றாண்டிற்கு மேலாக மன்றத்திற்காக அர்ப்பணிப்போடு சேவையாற்றிய திருமதி.யோகரஞ்சிதம் இராஜரட்ணம் எம்மை விட்டு பிரிந்து ஓராண்டு மறைந்தாலும் அவர் விட்டுச் சென்ற பணிகளை அவர் வழியில் தொடர்வோம். அவர் நினைவுகள் எம்மை வழிநடத்தட்டும்!

வாணி ஸ்ரீதர்
(ஞானசம்பந்தர் கலைமன்றம்)
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

# திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகம், திருநாவுக்கரசுநாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஆகியோரது குருபூசையினையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் திருமுறை மனனப்போட்டி நடத்தவுள்ளது.

இப் போட்டி தரம் 1,2 மாணவர்களுக்கு நடைபெறவுள்ளது. இப்போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமைகாலை 9 மணிக்கு தரம் 1 மாணவர்களுக்கும் தரம் 2 மாணவர்களுக்கு பிற்பகல் 2 மணிக்கும் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 29 ஆம் திகதி ஆகும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல. 82 (144) நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 வரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் பரீட்சைச் செயலர் சு.சிறிகாந்தன் தெரிவித்துள்ளார். (5-4)



அனலைதீவு தம்பையா அரியரத்தினம் எழுதிய "இலங்கைத் தமிழர்களின் புலம்பெயர்வும் வாழ்வியலும்" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் அறிவாலய மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர், செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (படம் : ரவிசாந்)

# சிறுகதைப் போட்டி

(குப்பிழான்)

பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றம் பொன்விழாவை முன்னிட்டுச் சிறுகதைப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் இலங்கை மற்றும் புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்கள் கலந்து கொள்ள முடியும். சிறுகதைகள் ஈமெயிலில் அனுப்பி வைக்க வேண்டும். ஆக்கங்கள் சொந்தப் படைப்பு என்பதையும், வேறு எந்தப் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். Word ஆவணமாக ஒருங்குறி எழுத்துருவில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

போட்டியாளர்கள் சிறுகதையை marumalarchymantram50th@gmail.com எனும் ஈமெயில் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், போட்டி முடிவுத் திகதி 30.6.2022 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6-18)


# 1 ஆம் ஆண்டு நீங்காத நினைவுகளுடன்...

மண்ணில் 1949 – 09 – 23

விண்ணில் 2021 – 04 – 20



அமரர். பிலிப்பு அல்பிறட் (சின்னத்துரை)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது அப்பா
உங்கள் அன்பு முகம்தனை
எப்படி மறந்து விடுவோம் அப்பா
அன்பின் உருவாய் எம்
வளர்ச்சிக்காய் உழைத்த உங்களை
என்றும் மறவோம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புதுக்குடியிருப்பு.

(11083)

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Ammanai Saran Adainthal Athika Varamperalam"

SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5 Chapel Road, London W13 9AE. Phone:0208 810 0835

Founded:10-08-1991 Charity No:1014409

www.ammanealing.org Email:info@ammanealing.org






எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின்அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். REF:SKTAT/05/22

**பணிநிலை 1 மகோற்சவ சிவாச்சாரியார் (Hindu religious workers with non-pastoral role)**

தகைமைகள்: விண்ணப்பதாரி மகோற்சவ குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.

**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் மகோற்சவ பூசைகள் செய்தல்.

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கட்டு வழங்கப்படும்

விண்ணப்ப முடிவு திகதி: 15-05-2022 [ 15 May 2022 ]

**பணிநிலை 2 நாதஸ்வர தவில் கலைஞர்கள் (Hindu religious (Musicians) workers)**

தகைமைகள்: நாதஸ்வர தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்தில் இருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்

**கடமைகள்:** ஆலய பூசைகாலங்களில் மங்கள இசை இசைத்தல்

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.

விண்ணப்ப முடிவு திகதி: 15-05-2022 [ 15 May 2022 ]

(11081)

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

### சங்க கட்டடங்களை வாடகைக்கு வழங்குதல்

எமது சங்கத்திற்குச் சொந்தமான கீழ் குறிப்பிடப்பட்ட கட்டடங்கள் வாடகைக்கு வழங்கப்படவுள்ளன. கட்டடம் தேவைப்படுவோர் **கேள்வி மனுவினை** சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

**கட்டட விபரம்**

| | | |
|---|---|---|
| 01. | இணுவில் கோவில் வாசலில் அமைந்துள்ள களஞ்சியம் | -252 சதுர மீற்றர் |
| | இணுவில் கோவில் வாசலில் கட்டடத்தின் மேல்மாடி | -72 சதுர மீற்றர். |
| 02. | ஏழாலை மேற்கு கிளை நிலைய கட்டடத்தின் மேல்மாடி | -238 சதுர மீற்றர் |
| | ஏழாலை மேற்கு களஞ்சிய கட்டடம். | -144 சதுர மீற்றர். |
| 03. | குப்பிழான் மத்தி சந்திக்கருகாமையில் களஞ்சிய கட்டடம் | -216 சதுர மீற்றர். |

மேற் குறிப்பிட்ட கட்டடங்களை பார்வையிட விரும்பின் இன்றிலிருந்து வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00மணி வரை பார்வையிடலாம். நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.

விண்ணப்ப முடிவுத்திகதி 05.05.2022ஆம் திகதி நண்பகல் 12 மணி

(C-4196) **பொது முகாமையாளர்.**

## மணிவிழா வாழ்த்து

யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் மணி விழாக் காணும் ஆசிரியர்

திருமதி.

**விஜயபவானி அசோக குமாரன்**

*(SLTS-1, BA, PGDE)*

Best Wishes



*எமது வித்தியாலயத்தில் 07.04.2014 முதல் 19.04 2022 வரை 08 வருடங்கள் சேவையாற்றி இன்று 29 வருட கால ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்று மணி விழாக் காணும் ஆசிரியையின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

**சேவைக் காலம்**

| | | |
|---|---|---|
| 01. | வ/விபுலானந்தாக் கல்லூரி | 11.01.1993 - 20.07.1999 |
| 02. | யா/அருணோதயாக் கல்லூரி | 21.07.1999 - 01.02.2007 |
| 03. | யா/வயாவிளான் மத்திய கல்லூரி | 02.02.2007 - 06.04.2014 |
| 04. | யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம் | 07.04.2014 - 19.04.2022 |

**ஆசிரிய நலன்புரிக் கழகம்**
**யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயம், புன்னாலைக்கட்டுவன்.**

(11079)

# இலங்கையின் உயர்மட்டத்தில் ஊழல்கள்
## அமெரிக்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் உயர்மட்டத்தில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தனது சமீபத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு எதிரான பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் இராணுவ அதிகாரிகளை விடுதலை செய்தல், உயர் பதவிகளுக்கு பதவி உயர்வு வழங்குதல் உள்ளிட்ட பல சம்பவங்களுக்கு இலங்கை மீது அமெரிக்க அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ள மிக மோசமான அறிக்கை இதுவாகும் எனவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. (ஙி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 24

# உலகை இயங்க வைப்பது அன்பு



அது ஒரு விளையாட்டு மைதானம். 8 சிறுவர், சிறுமிகள் வரிசையாக நின்று ஒரு ஓட்டப்பந்தயத்திற்காக தயாராகிக் கொண்டிருந்தனர்.

ரெடி, ஸ்டார்ட் , கோ...

விளையாட்டு துப்பாக்கியின் சத்தம் கேட்டு குழந்தைகள் ஓடத் தொடங்கினர்.

ஒரு 15 அடி சென்று இருப்பார்கள். அவர்களில் ஒரு குழந்தை திடீரென்று கீழே விழுந்தது.

அடிபட்ட காரணத்தால் அந்த குழந்தை அழ ஆரம்பித்தது.

ஏதோ சத்தம் வரவே ஓடிக் கொண்டிருந்த அனைத்துக் குழந்தைகளும் திரும்பி பார்த்தனர். பின்னர் அந்தக் குழந்தையை நோக்கி ஓடி வந்தனர்.

அதில் ஒரு குழந்தை கீழே குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டு கேட்டது.

"இப்போ வலி போயிடிச்சா"

அதை பார்த்த மற்றக் குழந்தைகளும் அவளை முத்தமிட்டனர்.

பின்னர் எல்லோரும் அந்தக் குழந்தையை தூக்கினார்கள்.

பின்னர் அந்தக் குழந்தையை தூக்கியவாறே வெற்றி இலக்கை நோக்கி ஓடினார்கள்.

அதைப் பார்த்த விழாக் குழுவினரும், பார்வையாளர்களும் அதிர்ச்சி அடைந்தனர். எல்லோர் கண்களிலும் கண்ணீர். அந்தப் பரவசத்தால் எழுந்து நின்று கை தட்டி பாராட்டினார்கள்.

கண்டிப்பாக அந்த ஒலி கடவுளுக்கும் கேட்டு இருக்கும்.

ஆமாம். இது உண்மை. இது நடந்தது வேறு எங்குமில்லை. இந்தியாவில், ஹைதராபாத்தில் நடந்த உண்மைச் சம்பவம்.

அந்த விழாவை நடத்தியது மனநலம் குன்றியவர்களுக்கான தேசிய நிறுவனம்.

அதில் கலந்து கொண்ட குழந்தைகள் மனநலம் குன்றியவர்கள்.

ஆம். அவர்கள் மனத்தால் குன்றியவர்கள்.

ஆனால் குணத்தால்?

இதிலிருந்து அவர்கள் உலகத்திற்கு சொல்வது என்ன?

மனித-ஒற்றுமை

மனித-நேயம்

மனித-சமத்துவம்.

வெற்றி பெற்ற மக்கள், தன்னை விட தாழ்ந்தவர்களுக்கு உதவிட வேண்டும். அப்போதுதான் அவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாக மாட்டார்கள்.

ஆம் ! அன்பு நண்பர்களே .

அன்பு மட்டுமே இந்த உலகை நிற்காமல் ஓட வைக்கும்.

தூய்மை , பொறுமை , விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும் . அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும் ... ....

## ஹீரோவாக போற்றப்படும் உக்ரைன் நாய்க்குட்டி

(கீவ்)

உக்ரைன் போர் வீரத்தின் கதைகள் நிறைந்தது. மனிதர்கள் மட்டுமல்ல, விலங்குகளும் ரஷ்ய வீரர்களை முன்னேற விடாமல் உள்ளூர் மக்களைக் காப்பாற்ற தங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகின்றன.

அவற்றுள் இரண்டு வயதுடைய "பேட்ரான்" என்ற ஜாக் ரஸ்ஸல் டெரியர் நாய் உக்ரைனைச் சுற்றிலும் ஆபத்தான வெடிமருந்துகளை மோப்பம் பிடித்து ஹீரோவாகியுள்ளது.

உக்ரைனின் ஸ்டேட் எமர்ஜென்சி சர்வீஸ் ஆஃப் உக்ரைன் வீடியோவை பேஸ்புக்கில் வெளியிட்டது, அந்த நாய் இதுவரை 90 வெடிபொருட்களை கண்டு பிடித்து கொடுத்துள்ளது என்று கூறியுள்ளது.

ஜாக் ரஸ்ஸல் டெரியர் என்பது 200 ஆண்டுகளுக்கு முன்பு பிரித்தானியாவில் நரிகளை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு நாய் இனமாகும். இது பார்சன் ரஸ்ஸல் டெரியர் என்றும் அழைக்கப்படுகிறது.

உக்ரைனிய வீரர்களை ஹீரோக்களாக போற்றிவரும் சமூக வலைத்தள பயனர்கள் அந்த நாயையும் ஹீரோவாக போற்றுகின்றனர். (நி-4)

# எ...

# வடகொரி...

# அ...

(வோஷிங்டன்)

வடகொரியா த...

பேச்சுவார்த்தைக்...

கொரியாவும் வ...

வடகொரியாவுக்கான அமெரிக்காவின் சிறப்புப் பிரதிநிதி சங் கிம், கொரிய தீபகற்பகத்துக்கான தென் கொரியாவுக்கான சிறப்புப் பிரதிநிதி நோ கியு-டுக்கை சியோலில் நேற்று

# ராட்சத மாலை அணிவித்து
## அமைச்சர் ரோஜாவுக்கு வரவேற்பு



(டில்லி)

ஆந்திராவில் உள்ள நகரி தொகுதியில் எம்.எல்.ஏ வாக உள்ள ரோஜா தற்போது ஆந் திர மாநில சுற்றுலாத்துறை அமைச்சராக பதவி ஏற்றுள்ளார். அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு அவரது சொந்தத் தொகுதியான நகரிக்கு முதல் முறையாக நேற்று முன்தினம் மாலை சென்றார்.

அப்போது அந்த ஊர் மக்கள் ஒன்றாகத் தெருவின் இரு பக்கமும் வரிசையாக நின்று அவரை மலர்தூவி வரவேற்றனர்.

மேலும் கிரேன் மூலம் 1 டன் எடை கொண்ட ராட்சத ரோஜா மாலை அணிவித்து நடிகை ரோஜாவை வரவேற்றனர். மாலை அணிவித்த காட்சி சினிமாவில் உள்ளதைப் போல பிரம்மாண்டமாக இருந்தது. மக்கள் மலர் தூவி வரவேற்பதை மிகவும் உற்சாகமாக ஏற்றுக் கொண்டு அமைச்சர் ரோஜா நன்றி தெரிவித்தார். (நி-4)

# வாகன ஏற்றுமதி இந்தியாவில் அதிகரிப்பு

(டில்லி)

இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு வாகனங்கள் ஏற்றுமதி செய்வது 43 விழுக்காடுகள் அதிகரித்துள்ளது.


இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு 2021-2022 நிதியாண்டில் 5 இலட்சத்து 77 ஆயிரத்து 875 வாகனங்கள் ஏற்றுமதி செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த நிபந்தனையும் இன்றி
# ொரியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த
# மெரிக்கா தயார்

டன்)

**பா தனது ஏவுகணை சோதனைகளை நிறுத்திவிட்டு தைக்குத் திரும்ப வேண்டுமென அமெரிக்காவும் தென் ம் வலியுறுத்தியுள்ளன.**



முன்தினம் திங்கட்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த சந்திப்புக்கு பிறகு கருத்து தெரிவித்த வடகொரியாவுக்கான அமெரிக்காவின் சிறப்புப் பிரதிநிதி சங் கிம்,

'வடகொரியாவின் சீர்குலைக்கும் நடவடிக்கைகளுக்கு வலுவான பதிலடியை அளிக்க வேண்டும் என ஒப்புக்கொண்டுள்ளோம். வடகொரியாவுக்கு எதிரான நோக்கம் எதுவும் இல்லை.

அந்த நாட்டுடன் எந்த நிபந்தனையுமின்றி பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா தயாராக உள்ளது. வடகொரியாவும் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும்' எனத் தெரிவித்தார். நிகழாண்டில் 13 ஆவது முறையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஓர் ஏவுகணை சோதனையை வடகொரியா மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## போராட்டக்காரர்களை கலைக்க வானா நகரில் துப்பாக்கி பிரயோகம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானுடனான வானா பஜார் மற்றும் அங்கூர் அடா எல்லைக் கடக்கும் பகுதியை மூடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்களை கலைப்பதற்காக பொலிஸார் மற்றும் எல்லைப் படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.




வானா நகரில் உள்ள சாரணர் முகாம் முன்பு ஏராளமான வியாபாரிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் திரண்டு பாதையை திறக்கக் கோரி முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

ஆனால் அவர்கள் போராட்டத்தை நிறுத்தாது தொடர்ந்தனர். இதன் பின்னர் உள்ளூர் பெரியவர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளின் பேச்சு வார்த்தைக்குப் பிறகு சந்தைப் பகுதி திறக்கப்பட்டது. (நி-4)

## ஜோ பைடன் உக்ரைனுக்கு செல்ல மாட்டார்

### வெள்ளை மாளிகை அறிவிப்பு



(வோஷிங்டன்)

ஐரோப்பிய நாட்டுத்தலைவர்கள் உக்ரைனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அந்நாட்டிற்கு நேரில் சென்று ஜெலன்ஸிகியை சந்தித்து பேசி வருகின்றனர்.

இந்நிலையில் ஜெலன் ஸ்கி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது நாட்டிற்கு வந்து போர் சூழலை பார்க்க வேண்டும் என வேண்டு கோள் விடுத்து வருகிறார். ஜோ பைடனும் தனது பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தாலும் ஒரு முறை உக்ரைனுக்கு சென்று கீவ் நகரை பார்வையிட தயாராக இருப்பதாக கூறிவந்தார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உக்ரைன் செல்லமாட்டார் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. அவருக்கு பதில் அமெரிக்க இராணுவ உயரதிகாரிகள் உக்ரைன் சென்று பார்வையிடுவர் எனவும் விளக்கம் அளித்துள்ளது. (நி-4)

யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி செய்யப்படும் வாகனங்களில் மாருதி, சுசுகி ஆகியவை முதலிடத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள அதேநேரம், ஏற்றுமதி வாகனங்களின் எண்ணிக்கையில் மாருதிக்கு அடுத்த இடத்தில் ஹூண்டாய், கியா நிறுவனங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## ஆப்கானிஸ்தான் பள்ளியில் குண்டு வெடிப்பு 4 பேர் பலி, 7 குழந்தைகள் படுகாயம்




(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலை நகர் காபூலின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள பள்ளிக் கூடம் ஒன்றில் அடுத்தடுத்து 3 குண்டுகள் வெடித்துள்ளதாக ஆப்கான் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் 7 குழந்தைகள் உட்பட 14 படுகாயம் அடைந் துள்ளதாகவும், சுமார் 4 பேர் இறந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்த குண்டு வெடிப்புக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்க வில்லை. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானை தாலிபான்கள் பிடித்த நிலையில் பயங்கரவாத த்தாக்குதல்கள் மேலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களால் நேற்றைய தினம் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தனிடம் கல்லூரிச் சமூகத்திற்கு பேருந்து ஒன்று கையளிக்கப்பட்டது.

(படங்கள்- சிவசாந்தன்)

## நூல் அறிமுகம்

(குப்பிழான்)

என்.கே.ரகுநாதம் நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.45 மணியளவில் சுழிபுரம் கே.ஏ.சுப்பிரமணியம் நூலக மண்டபத்தில் ஈழத்துத் தமிழிலக்கிய அரசியல் ஆய்வாளர் ந.இரவீந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (5-4-18)

# முல்லைத்தீவில் 20 ஆயிரம் ஏக்கர் காணி படையினரால் அபகரிப்பு

## ரவிகரன் சுட்டிக்காட்டு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலத்தை படையினர் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாக முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நில ஆக்கிரமிப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலங்களை படையினர் ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றார்கள். அளம்பிலில் தனியார் காணியை அபகரித்து தோட்டச்செய்கையிலும் கிறீன் ஜெக்கெட் எனும் பெயரில் செம்மலையில் சுற்றுலா விடுதியும் புதுக்குடியிருப்பில் மரக்கறிச் செய்கை பண்ணை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினரும் கோம்பக சந்தி என்று கூறப்படும் வேம்படி சந்தியில் பல ஏக்கர் காணி அபகரிப்பும் தோட்டச் செய்கையுடன் பொது விற்பனைத் தளம் என பலவாறாகப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனை விட படையினருடைய அச்சுறுத்தல்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. 2021.10.05 அன்று கொவிட் காலத்தில் இராணுவம், தொல்லியல் திணைக்களத்தினர், பௌத்த துறவிகள் ஒன்றுகூடி பிரித்தோதலை இராணுவ விழாப்போல் மேற்கொண்டிருந்தார்கள்.

இதனைவிட 2022.03.19 அன்று பிரதமர் யாழ்.விஜயத்தின்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பிரதமரிடம் சென்று தமது உறவுகளது நிலைப்பற்றி கேட்கச் சென்ற போது வாகனத்தினை வழி மறித்தது மட்டுமல்லாமல் பெண்மணிக்கு நடந்த அட்டூழியங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. தமிழ் சகோதரிகள் போராட வெளிக்கிட்டால் இப்படித்தான் நடக்கும் என அன்றைய சம்பவத்திலும் படையினர் காட்டி விட்டனர் எனத் தெரிவித்தார். (5-4-299)


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

ஒரு கோடி ரூபாய்கள் பெறுமதியான
நிலையான வைப்புத் திட்ட அங்குரார்ப்பணம்

காலம்: 21-04-2022 வியாழக் கிழமை காலை 8.30 மணி
இடம் : றொமைன் மண்டபம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

வரவேற்புரை
வண. க. ராஜா

ஆசியுரை
கலாநிதி எஸ். கே. எழில்வேந்தன்
*அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி*

தலைமையுரை
திரு. ம. வித்தியானந்தநேசன்
*தலைவர், யா. ம. க. பழைய மாணவர் சங்கம்*
*மாவட்டப் புள்ளிவிபரவியலாளர், கிளிநொச்சி*

பிரதம விருந்தினர்
திரு. வாமதேவா தியாகேந்திரன்
*ஸ்தாபகர், தியாகி அறக்கொடை நிறுவனம்*

சிறப்பு விருந்தினர்கள்
திருமதி ஆர். பாலசுந்தரம்பிள்ளை
*ஓய்வுநிலை ஆசிரியை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி*
திரு. த. ரவிராஜ்
*பொறியியலாளர், ஐக்கிய இராச்சியம்*

நன்றியுரை
திரு. மு. ராஜவரோதயம்
*செயலாளர், யா. ம. க. பழைய மாணவர் சங்கம்*
*அதிபர், யா/தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - 2022

(சி-4198)


மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு லயன்ஸ் இன்டர்னேஷனல் கழகத்தின் நிதி உதவியில் சுமார் 30 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ சிகிச்சை உபகரணங்கள் நேற்று முன்தினம் திங்கட் கிழமை வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டன.



இந்நிகழ்வில் லயன்ஸ் கழகத் தலைவர் , உறுப்பினர்கள் மற்றும் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதன், மன்னார் மாவட்ட மருத்துவமனை பணிப்பாளர் செந்தூர்பதிராஜா, மருத்துவர்கள் தாதிய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம்-ஜோசப்நயன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 300 | 320 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| தக்காளி | 120 | 90 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 120 | 100 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 180 | 180 | 200 | 200 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 250 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 350 | 280 | 100-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 240 | 220 | 240 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 120 | 200 |
| லீக்ஸ் | 200 | 140 | 150 | 200 |
| பீற்றூட் | 160 | 160 | 200 | 220 |
| கறிமிளகாய் | 250 | 300 | 220 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 700 | 800 | 1200 |
| போஞ்சி | 300 | 300 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 80 | 140 | 80 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

# கிளிநொச்சி சேவைச் சந்தையில் 10 கடைகள் உடைப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி சேவைச் சந்தையில் 10 கடைகள் உடைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த உடைப்பு சம்பவம் நேற்று அதிகாலை [illegible] மணியளவில் இடம்பெற்றுள்ளது. நபர் ஒருவர் குறித்த கடைகளை உடைக்கும் காட்சிகள் CCTV களில் பதிவாகியுள்ளது.

உடைக்கப்பட்ட கடைகள் பெரும்பாலும் புடவைக்கடைகள் என்பதுடன், பாத்திர கடைகள், அழகுசாதன கடைகள் மற்றும் தேநீர் கடையும் உள்ளடங்குகின்றன.

சம்பவத்தில் பொருட்கள் திருடப்படவில்லை என்பதுடன், தேநீர் கடை ஒன்றில் சிறு தொகை பணம் மற்றும் இரு குளிர்பானங்கள், சிற்றுண்டிகளும் திருடப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குற்றவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-100-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## ஜென்மத்தில் வந்தது குருபகவான்; சிந்தித்து செயற்பட்டால் நன்மை வரும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**உதவும் குணத்தால் பலரின் உள்ளத்தில் இடம்பிடிக்கும் மீன இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 13.4.2022 முதல் உங்கள் இராசியிலேயே சஞ்சரித்துள்ளார். இராசி நாதன் குரு உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். உற்சாகத்தோடு செயற்படுவீர்கள்.

தடைகள் தானாக விலகும். தாமதங்கள் அகலும். குருவின் பலம்பெற்ற பார்வையும், சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பலமும் உங்களுக்கு பலவிதங்களில் நன்மையை வழங்கப் போகிறது.

### குரு இருக்கும் இடத்தின் பலன்

நவக்கிரகங்களில் சுபக்கிரகமாக விளங்கும் குருபகவான், உங்கள் இராசிக்கு அதிபதியானவர். அவர் உங்கள் இராசியிலேயே பலம் பெற்று சஞ்சரிக்கிறார். இராசிநாதன் பலம்பெற்றிருந்தால் யோசிக்காமல் எதையும் செய்யலாம் என்பது முன்னோர் வாக்கு.

உங்கள் இராசி நாதனாக மட்டுமல்லாமல், 10 ஆம் இடத்திற்கும் அதிபதியாக இருப்பவர் குரு பகவான். எனவே தொழில் வளம் சிறப் பாக இருக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் படிப்படியாக இல்லத்தில் நடைபெறும்.

### குருவின் பார்வை பலன்

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான், உங்கள் இராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களை பார்க்கிறார். குருவின் பார்வை 5ஆம் இடத்தில் பதிவதால், மக்கள் போற்றும் அளவிற்கு செல்வாக்கும், மகத்தான பதவி வாய்ப்பும் கிடைக்கலாம். குறிப்பாக முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடு வந்துசேரும். பொன்னும், பொருளும், போற்றுகின்ற செல்வாக்கும் அடைவீர்கள். பிள்ளைகளுக்கு தகுந்த வேலை கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

குருவின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால், களத்திர ஸ்தானம் புனிதமடைகின்றது. மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழிபிறக்கும். திருமணம் ஆனவர்களாக இருந்தால் வாழ்க்கைத் துணை வழியே நன்மை அதிகரிக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். சேமிப்பு உயரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால், பாக்கிய ஸ்தானம் பலம் பெறுகின்றது. எனவே பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். 'கூட்டு முயற்சிகளில் இருந்து விலகி, தனித்து இயங்கலாமா?' என்று யோசிப்பீர்கள்.

### நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள் சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (13.4.2022 முதல் 30.4.2022 வரை)

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு. பூரட்டாதி நட்சத்திரக் காலில் தனது சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது நல்ல பலன்களை வாரி வழங்குவார். குறிப்பாக வருமானம் உயரும். வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும்.

### சனி சாரத்தில் குரு சஞ்சாரம் (1.5.2022 முதல் 24.2.2023 வரை)

உங்கள் இராசிக்கு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். உத்திரட்டாதி நட்சத்திரக் காலில், லாப- விரயாதிபதியாக விளங்கும் சனியின்




சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது வரவும், செலவும் சமமாக இருக்கும். காலையில் வந்த வரவு மாலையில் செலவாகிவிடலாம். வெளிநாடு செல்லும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கொஞ்சம் யோசித்துச் செயற்படுவதே நல்லது. அசையாச் சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

### புதன் சாரத்தில் குரு சஞ்சாரம்(25.2.2022 முதல் 22.4.2023 வரை)

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், புதன். ரேவதி நட்சத்திரக் காலில், சுக ஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் சாரத்தில் குரு பகவான் உலாவரும் பொழுது இடம், பூமியால் இலாபம் கிடைக்கும். இல்லம் கட்டும் வாய்ப்பு கைகூடும்.

குடும்பத்தில் கல்யாணம், சீமந்தம், காது குத்து போன்ற சுபகாரி யங்கள் நடந்தேறும். பெற்றோரின் மணிவிழாவையும் சிறப்பாக நடத்தி வைப்பீர்கள்.

பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும்.

### குருவின் வக்கிர இயக்கம் (20.7.2022 முதல் 16.11.2022 வரை)

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு வக்கிர இயக்கத்தில் இருக்கும் பொழுது உடல்நலக் குறைபாடு ஏற்படலாம். மனபயம் அதிகரிக்கும். 'மாற்றங்கள் வந்தால் ஏற்றுக் கொள்ளலாமா? வேண்டாமா?' என்று சிந்திப்பீர்கள்.

அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகள் கூடுதல் பொறுப்பை தந்து, உங்களை திணறடிப்பார்கள். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் குரு என்பதால், ஒருசில நல்ல காரியங்கள் நடைபெறலாம். புது மனை புகுவிழா நடத்தும் யோகம் உண்டு.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தக் குருப்பெயர்ச்சி நன்மை தரும் பெயர்ச்சியாகவே அமையும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிக்கும் ஆற்றல் பிறக்கும். கல்யாணம், சீமந்தம், காதுகுத்து என்று, இல்லத்தில் சுபகாரியங்கள் தடையின்றி நடைபெறும். கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் கூடும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கிடைக்கும்.

### வளம் தரும் வழிபாடு

இந்தக் குருப்பெயர்ச்சி இனிய பெயர்ச்சியாக அமைய வியாழன் தோறும் குருகவசம் பாடி குருபகவானை வழிபாடு செய்வதோடு, குரு தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கும் தலங்களுக்குச் சென்றும் வழிபட்டு வரலாம். இதனால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். (முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## எதிர் நீச்சல்



(நேற்றைய தொடர்ச்சி)

இப்படிப்பட்டவனிடமா குரு தன்னை அனுப்பி இருக்கிறார் என்று எண்ணிச் சந்திரன் ஆச்சரியப்பட்டான். ஆனாலும் ஆத்மானந்தர் கூறினாரே என்பதற்காக முகுந்தனைப் பார்த்துவிட்டுப் போவது என அவன் எண்ணிக் கொண்டான்.


அவன் யோசித்தவாறே ஊருக்கு வெளியே ஏரிக்கரை மீது நடக்கையில் இருவர் அவனை நோக்கி வந்தனர். அவர்களில் ஒருவன் "ஐயா! நாங்கள் ஒருவருக்கு வைத்தியம் செய்ய ஒரு மரத்துண்டை வெட்டி ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்தோம். எங்கள் வண்டி குடை சாய்ந்து மரத் துண்டு கீழே விழுந்து விட்டது. அதை எங்கள் வீடு வரை எடுத்து வந்தால் ஒரு உயிரைக் காப்பாற்றிய புண்ணியம் உங்களுக்குக் கிடைக்கும்" என்றான். அவன் தான் முகுந்தன் என ஊகித்த சந்திரன் அவர்களுக்கு உதவ மரத் துண்டை தூக்கிக் கொண்டு நடந்தான். அப்போது சற்று முன் அவன் பார்த்த பயில்வான் எதிரே வந்தான். அவன் முகுந்தனைப் பார்த்ததுமே பணிவுடன் "நாளை பெண் பார்க்க வருகிறார்களாமே. நிறைய வேலை இருக்கும். என்ன செய்ய வேண்டுமோ சொல். நான் வந்து செய்கிறேன்" என்று கூறி வணங்கிவிட்டுப் போனான். இதைக் கண்ட சந்திரன் ஆச்சரியப்பட்டான். வழியில் போகையில் மறுநாள் விசேஷத்திற்கு மளிகை சாமான்கள் அனுப்புவதாக மளிகைக் கடைக்காரனும், பால் அதிகம் கொண்டு வருவதாகப் பாற்காரனும் வெளுத்த துணிகளை உடனேயே கொண்டு வந்து கொடுப்பதாகச் சலவைத் தொழிலாளியும் கூறியது கேட்டு சந்திரன் மேலும் ஆச்சரியப்பட்டான். முகுந்தனும் அவர்கள் எல்லோரையும் மறுநாள் வீட்டில் நடக்கப் போகும் விசேஷத்திற்கு வருகை தருமாறு வேண்டிக் கொண்டான். கிராம மணியகாரரும் முகுந்தனைக் கண்டு "என்ன முகுந்தா? உன் மகளைப் பெண் பார்க்க வருகிறார்களாமே. ஆயிரம் பொய் சொல்லியாவது கல்யாணத்தை முடி என்று பெரியவர்கள் சொன்கிறார்கள். நீ இந்த சம்பந்தத்தை விட்டு விடாதே. என்ன உதவி வேண்டுமானாலும் நான் செய்கிறேன். அவர்கள் என்ன கேட்டாலும் கொடுப்பதாகச் சொல்லி விடு என்று கூறி விட்டுப் போனார்.

இதை எல்லாம் கண்டு சந்திரன் ஆச்சரியப்பட்டவாறே முகுந்தனின் வீட்டை அடைந்தான். அங்கே அவன் மரத் துண்டுகளை இறக்கி வைத்து விட்டு முகுந்தனிடம் "உங்களை நேரில் கண்டதும் ஊரார் உங்களை வெகுவாகப் புகழ்கிறார்கள். ஆனால் உங்கள் பின்னாலேயே உங்களை இகழ்கிறார்களே. இது ஏன்?" என்று கேட்டான். முகுந்தனும் "நாளை வரை என் வீட்டில் தங்குங்கள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்




இராமன் ஒன்பது அம்புகளை ஒருசேரக் கரன் மீது ஏவினான். அவற்றிற்கு எதிராக அம்புகளைச் செலுத்திக் கரன் அவற்றை அறுத்து அழித்தான்; அம்பு மழையினால் இராமனது உருவம் முழுவதையும் மறைத்து விட்டான். அதைக் கண்டு தேவர் நடுங்கினர். இராமன் வீராவேசம் கொண்டு வில்லை வேகமாக வளைத்தான்; அது முறிந்து விட்டது.

வில்லிழந்து இராமன், நிராயுதபாணியாக ஆகிவிட்டான். அடுத்து என்ன நடக்குமோ? என்று அஞ்சும் சூழ்நிலை ஏற்பட்டது. பரசுராமனிடமிருந்து பெற்ற மாபெரும் வில்லை வருணனிடம் கொடுத்திருந்தான்; அதற்காகக் கைநீட்டினான்; வருணன் கொண்டு வந்து சேர்த்தான்; அந்த வில் அவனுக்குக் கை கொடுத்தது; அதனால் ஏவிய அம்பு, கரனின் உயிரைக் குடித்தது.

சூர்ப்பனகை செயலிழந்து வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டாள்; மூக்கோடு தான் முடிந்திருக்கலாம்; வாக்கினால் கரன் உயிர் குடித்தமைக்கு வருந்தினாள்; எனினும், அந்தத் துன்பம் நீடித்திருக்கவில்லை; இராமனை அடைய வேண்டுமென்ற ஆசை அவளை வெறி கொள்ளச் செய்தது; "இராவணனிடம் சென்று இராமனைப் பிடித்துத் தருமாறு கேட்க வேண்டும்" என்று நினைத்த வண்ணம் இலங்கை நோக்கி விரைந்தாள்.

இராவணன் தன் அத்தாணி மண்டபத்தில் கொலு வீற்றிருந்தான், ஊர்வசி, திலோத்தமை முதலிய தெய்வ மகளிர் நடனமாடினர். அவன் செல்வக் களிப்பிலும் காமக் களிப்பிலும் தன்னை மறந்து தருக்கோடு வீற்றிருந்தான். தன்னை வெல்வாரும் கொல்வாரும் இன்றித் தரணியை ஆண்ட காவலன் அவன்.

இலங்கை நகரின் வடக்கு வாயிலில் மூக்கிலும் செவியிலும் குருதி கொட்டச் சூர்ப்பனகை முறையிட்டுக் கொண்டே வந்தாள். அந்நகர் அரக்க மகளிர் இதைக் கண்டு வயிற்றில் அடித்துக் கொண்டு இரங்கி அழுதனர். இராவணன் தங்கை மூக்கு அற்றுத் துணையின்றிப் போக்கற்று வந்திருப்பதை அவர்கள் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இலங்கை அரசன் கால்களில் விழுந்து புரண்டாள்; வேந்தன் இதைக் கண்டு அதிர்ச்சியும் ஆவேசமும் கொண்டான், இடியொலிபோல் பேராரவாரம் செய்து, "யாவர் செயல்?" என்று கேட்டான்.

"கானிடை அடைந்து காவல் புரிகின்ற வீரர் இருவர், மன்மதனைப் போன்ற அழகு உடையவர்; அவர்கள் மானிடர்தான் எனினும் மாஇடர் செய்துள்ளனர்; வாள் உருவித் தடிந்தனர்" என்றாள்.

"மானிடர்க்கு இத் துணிவு வாராது; நீ ஏதோ பெரிய தவறு செய்திருக்கிறாய்; அதனால்தான் அவர்கள் பொறுக்க முடியவில்லை. இந்த எல்லைக்குச் சென்று இருக்கிறார்கள்; நடந்ததை அச்சமின்றிச் சொல்" என்று கேட்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்.
– பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அவர்களே உண்மையை போட்டு உடைப்பார்கள்

நான் திருடவில்லை. எனது கரங்கள் சுத்தமாகவே இருக்கின்றன.

இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய உரையின் முக்கிய பகுதி.

புதிய அமைச்சர்கள் பதவியேற்ற பின், ஆற்றிய உரையின்போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இங்குதான் நான் திருடவில்லை. எனது கரங்கள் சுத்தமானவை என்ற ஜனாதிபதி கோட்டாவின் வாக்குமூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியதாகிறது.

ஆம், ராஜபக்ஷ தரப்பு என்பது தனித்து கோட்டாபய ராஜபக்ஷவை மட்டும் குறித்து ரைப்பது அல்ல.

மாறாக பிரதமர் மகிந்த, நிதியமைச்சராக இருந்த பசில், நீர்ப்பாசன அமைச்சராக இருந்த சமல் ராஜபக்ஷ, விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த நாமல் ராஜபக்ஷ என்ற குடும்பத்தைக் குறித்து நிற்பதாகும்.

நிலைமை இதுவாக இருக்கையில், அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகின்ற மக்கள், ராஜபக்ஷ தரப்பு ஆட்சியில் இருந்து முற்றாக வெளியேற வேண்டும் என்பதை முன்னிறுத்தி போராட்டத்தை நடத்துகின்றனர்.

இந்த நிலையில் நானோ, எனது சகோதரர்களோ இந்த நாட்டின் சொத்துக்களைத் திருடவில்லை. எங்களின் கரங்கள் சுத்தமானவை என்றுதான் ஜனாதிபதி கோட்டாவின் உரை அமைந்திருக்க வேண்டும்.

ஆனால் அவர் அவ்வாறு கூறாமல், நான் திருடவில்லை. எனது கரங்கள் சுத்தமானவை என்று கூறியதற்குள் இருக்கக்கூடிய உள்ளார்ந்தம் மிகவும் முக்கியமானது.

அதாவது அந்த உரை குறித்து நாட்டு மக்களோ அன்றி ஏனைய நாடுகளோ கருசனையற்று இருக்கலாம்.

ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ புறநீங்கலாக மகிந்த, பசில், சமல், நாமல் ஆகியோரிடம் குறித்த உரை மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

ஆம், எனது கரங்கள் சுத்தமானவை என்று ஜனாதிபதி கூறும்போது, குறித்த குற்றச்சாட்டில் இருந்து தன்னை மட்டும் விடுவித்துக் கொள்வதான இலக்கு இருந்துள்ளதென்பதை அனுமானிக்க முடியும்.

மாறாக, நான் திருடவில்லை என்பதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தாவிட்டால், மற்றவர்கள் செய்த குற்றத்தில் தனக்கும் பங்கு என்றாகிவிடும் என்பதால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்குறித்த விடயத்தை தனது உரையில் சேர்த்திருந்தார் என அடிக்குறிப்பிடுவதும் தவறன்று.

எதுஎவ்வாறாயினும் பதவி பறிபோகும் போது, கஷ்டங்களும் துன்பங்களும் நெருக்கும்போது குற்றச்சாட்டுக்கள் குடும்ப உறுப்பினர்களை நோக்கி எழுதுவது இயல்பானதே.

ஆக அடுத்துவரும் நாட்களில்; ஒன்றாக ஆட்சிப்பீடத்தில் இருந்த குடும்ப உறுப்பினர்கள் தங்கள் சகோதர பாசத்தை மறந்து, ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டவே செய்வர்.

அந்தக் குற்றச்சாட்டு உண்மையைப் போட்டுடைப்பதாக இருக்கும்.

ஆம், இறைவன் தீர்ப்பு வழங்கத் தீர்மானித்தபின்பு அவனுக்கு உள்ளிருந்தே உண்மைகளை வெளிப்படுத்தி உலகுக்குக் காட்டுவது ஒன்றும் கடினமானதல்ல.

# தலையை மாற்றி அமைத்தாலும் மக்கள் ராஜபக்ஷர்களின் அரசை நம்பவில்லை

## ஜே.வி.பி தலைவர் அநுர குமார திசாநாயக்க

"ஜனாதிபதி, விவசாயிகளின் வாழ்க்கையை அழித்துவிட்டார். இப்போது அவர் தவறிழைத்துவிட்டோம் என்று புலம்புகின்றார்" என்று ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

தலை மாறி ஆட்சி அமைத்தாலும் மக்கள் இந்த அரசை நம்பவில்லை. மக்களின் நம்பிக்கையில்லாத ஆட்சியாளரால் இந்த நெருக்கடியிலிருந்து வெளிவர முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒரு நாட்டுக்கு இயற்கைப் பேரிடர் ஏற்பட்டால் அதை எதிர்கொள்வது நமது கடமை. ஆனால், இது நீங்கள் உருவாக்கியது நெருக்கடி.

விவசாயப் பிரச்சினை பாராளுமன்றத்தில் எத்தனை தடவை எழுப்பப்பட்டது?

விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டபோது, விவசாயிகளைத் தூண்டிவிடுவதாகக் கூறினீர்கள்.

இப்போது தாம் தவறிழைத்துவிட்டோம் என்று ஜனாதிபதி புலம்புகின்றார்.

நாட்டுக்கு ஒரு கொடிய பேரழிவை ஏற்படுத்திய ஜனாதிபதியைக் குறை சொல்ல வேண்டுமா?

அவர் விவசாயிகளின் வாழ்க்கையை அழித்துவிட்டார். இப்போது அவர் புலம்புகின்றார் என்றார். (ம-7)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து பொறுப்புக்களிலிருந்து சுரேன் ராகவன் நீக்கம்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சுரேன் ராகவன் கட்சியின் அனைத்து பொறுப்புக்களிலும் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அவர் வகித்த உதவிச் செயலாளர், வன்னிமாவட்ட தலைவர் மற்றும் சர்வதேச உறவுகளுக்கான செயலாளர் ஆகிய பதவிகளிலும் இருந்து நீக்கப்பட்டுள்ளார். (ம-7)

## எரிபொருளுக்கு விலைச்சூத்திரம்

எரிபொருள் விலை தொடர்பான புதிய விலைச் சூத்திரம் ஒன்று எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் என எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதே விலைச்சூத்திரத்தின் பிரகாரம் எரிபொருள் விலை அதிகரிப்பை மேற்கொள்ள ஜஜிச நிறுவனத்துடன் நேற்று விசேட கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** பெரிய பொக்கணை, வாதரவத்தை, நாரந்தனை தெற்கு, நாரந்தனை நீர் வழங்கல் திட்டம், புளியங்கூடல், சரவணை சந்தி, சுருவில் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** 18 வது வி.ஐ. ஆர் இராணுவ முகாம்,- தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவ முகாம், இரணைப்பாலை, 68 ஆவது பிரிவு-பயலொக்கோபுரம்- இரணைப்பாலை, தேவிபுரம் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.


## டொலரின் பெறுமதி 339 ரூபாயாக உயர்வு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 327 ரூபா 50 சதமாகவும், விற்பனை பெறுமதி 339 ரூபா 99 சதமாகவும் பதிவாகியுள்ளது.

அவ்வாறே, ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 428 ரூபா 51சதம். விற்பனை பெறுமதி 443 ரூபா 67 சதமாகவும் யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 357 ரூபா 42 சதம். விற்பனை பெறுமதி 369 ரூபா 33 சதமாகவும் சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 348 ரூபா 10 சதம். விற்பனை பெறுமதி 361 ரூபா 68 சதமாகவும் கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 260 ரூபா 78 சதம் விற்பனை பெறுமதி 271 ரூபா 52 சதமாகவும் பதிவாகியுள்ளன. (ம-7)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

இதற்குள் குருதேவர் இளைஞர்களுடன் சம வயதினர்போல் கேலியும் கிண்டலும் குறும்புமாக வேடிக்கை விநோதங்களில் ஈடுபடத் தொடங்கி விட்டிருந்தார். சிரிப்பின் பேரலைகள் எழுந்த வண்ணம் இருந்தன. அங்கே ஆனந்தச் சந்தை கூடியிருப்பது போல் தோன்றிற்று.

ம- வியப்புடன் அந்த அற்புத மனிதரைப் பார்த்தார். 'இது என்ன! சமாதியிலும், இதுவரை கண்டிராத பேரானந்தப் பரவச நிலையிலும் மூழ்கியவராக நாம் நேற்று கண்டது இவரையா? இவரா இன்று இப்படி மிகமிகச் சாதாரண மனிதனைப்போல் நடந்து கொள்கிறார்! முதன்முறையாக எனக்கு உபதேசம் செய்த போது என்னைக் கடிந்து கொண்டவர் இவர்தானா? "நீ என்ன ஞானியா?" என்று கேட்டவரா இவர்? "கடவுளுக்கு உருவம் உண்டு, கடவுள் அருவமும் கூட. இரண்டும் உண்மை" என்று சொன்னவர் இவர் தானா? " இறைவனே உண்மை, உலகிலுள்ள அனைத்தும் நிலையற்றவை" என்று எனக்குச் சொன்னது இவரா?, ஒரு செல்வந்தரின் வீட்டு வேலைக்காரி பற்றி எனக்கு அறிவுரை சொன்னவர் இவர்தானா?' என்றெல்லாம் ம-வின் மனம் எண்ணியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 46

அட்டவணை(N1) இனப்பிரிவு, சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு

மட்டக்களப்பு மாவட்டம்

| இனப்பிரிவு | எண்ணிக்கை | % | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 6,797 | 1.3 | பௌத்தம் | 6,281 | 1.2 |
| இலங்கைத் தமிழர் | 380,930 | 72.3 | இந்து | 338,882 | 64.4 |
| இந்தியத் தமிழர் | 2,078 | 0.4 | இஸ்லாம் | 134,065 | 25.5 |
| இலங்கை முஸ்லிம் | 133,854 | 25.4 | ரோமன் கத்தோலிக்கம் | 24,454 | 4.6 |
| வேறு | 2,908 | 0.6 | வேறு கிறிஸ்தவம் | 22,833 | 4.3 |
| | | | வேறு | 52 | 0.0 |
| மொத்தம் | 526,567 | 100 | மொத்தம் | 526,567 | 100 |

**பிரதேச செயலக மட்டத்தில் சனத்தொகை (2012)**

| பிரதேச செயலகம் | சிங்களம் | இலங்கை தமிழ் | இந்திய தமிழ் | முஸ்லிம் | வேறு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| கோ.ப. வடக்கு (வாகரை) | 310 | 20483 | 39 | 700 | 5 | 21537 |
| கோ.ப. மத்தி | 72 | 586 | 21 | 24965 | 43 | 25687 |
| கோ.ப.மேற்கு (ஓட்டமாவடி) | 18 | 72 | 18 | 22068 | 6 | 22182 |
| கோ.ப.(வாழைச்சேனை) | 371 | 22747 | 93 | 77 | 88 | 23376 |
| கோரளைப்பற்று தெற்கு (கிராண்) | 141 | 25781 | 201 | 20 | 0 | 26143 |
| ஏறாவூர் பற்று | 2123 | 60349 | 166 | 12703 | 137 | 75478 |
| ஏறாவூர் நகரம் | 203 | 3277 | 42 | 21045 | 76 | 24643 |
| மண்முனை வடக்கு | 1463 | 76777 | 916 | 4573 | 2498 | 86227 |
| மண்முனை மேற்கு | 191 | 28228 | 59 | 9 | 2 | 28489 |
| காத்தான்குடி | 36 | 20 | 153 | 40124 | 23 | 40356 |
| மண்முனை பற்று (ஆரையம்பதி) | 137 | 22891 | 106 | 7548 | 12 | 30694 |
| மண்முனை தென்மேற்கு | 1081 | 23601 | 38 | 5 | 1 | 24726 |
| போரதீவுப்பற்று வெல்லாவெளி | 386 | 35718 | 108 | 7 | 3 | 36222 |
| மண்முனை தென்,எருவில்பற்று | 265 | 60400 | 118 | 10 | 14 | 60807 |
| மட்டக்களப்பு மாவட்டம் | 6797 | 380930 | 2078 | 133854 | 2908 | 526567 |

## மட்டக்களப்பு மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 11 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி மட்டக்களப்பு மாவட்டம் 06 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 11 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி மட்டக்களப்பு மாவட்டம் 06 மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யக் கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 345 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 526,567 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 87,761 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 345 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 526,567 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 87,761 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் 10.11.2017 பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 27 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 31 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 58 சமர்ப்பிப்புகளில் 61 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

அதிகமான பிரேரணைகளின் பரிந்துரைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்ய வேண்டிய முறைபற்றி கூறியிருந்தாலும் அவற்றுள் சில சரியான தகவல்களைத் தரவில்லை. அவற்றுள் பல பரிந்துரைகளில் பிரதேச செயலகப் பிரிவுகளின் எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை), உள்ளூர் அதிகாரசபை எல்லைகளையும், அடிப்படையாகக் கொண்டு எல்லை நிர்ணயம் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தன. அவற்றில் சில மட்டக்களப்பு மற்றும் கல்குடா பிரதேசங்களுக்கு பல் உறுப்பினர் தொகுதிகள் வழங்கப்பட வேண்டும் என்று முன்மொழிந்திருந்தன.

மேலும் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், மேலும் பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் மேலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் ஏற்க முடியவில்லை.

அது மட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத்தகவல் மற்றும் பிரதேச் செயலக பிரிவுத்தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) போன்றவற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைப் கூறுபோடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களைத் தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது.

இரண்டு பிரேரணைகள் உள்ளூர் அதிகார சபை எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை நிறுவ பரிந்துரைத்திருந்தன.

குழுவானது இந்தப் பிரேரணைகளை கவனத்தில் கொண்டதோடு அனைத்து இனத்தவர்களினதும் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து கொண்டது.

முஸ்லிம்களின் மற்றும் தமிழர்களின் உரிமைகளைப்பாதுகாக்கும் வகையில் எல்லை நிர்ணயம் செய்ய பல பிரேரணைகள் பரிந்துரைத்திருந்தன. முழு மாவட்ட சனத்தொகையில் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 73% மற்றும் 25% ஆக உள்ளடங்கி இருந்ததை குழு அவதானித்தது. அனைத்து இனத்தவர்களினதும் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்காக இந்தப் பரிந்துரைகளை முடியுமான அளவு எல்லை நிர்ணயத்தின் போது சேர்துக்கொண்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாணின் விலை...

களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் பாண் ஒன்றின் விலை 30 ரூபாயாலும் ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் 10 ரூபாயாலும் இன்று முதல் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பாணின் புதிய விலை 150 ரூபாய்க்கு விற்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மாவின் விலை...

அறிவித்துள்ளது.

அதன்படி, இன்று முதல் 1 கிலோகிராம் கோதுமை மாவின் விலை 40 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## உணவுப் பொதி...

அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அதற்கமைய உணவுப் பொதி, கொத்து போன்றவற்றின் விலையை 20 வீதத்தால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-7)

## ரயில் மோதியதில்...

பலியாகியுள்ளார்.

நேற்று மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சங்கத்தானை பகுதியில் வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரரே ரயில் பாதையைக் கடந்து செல்ல முற்பட்ட வேளையில் யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற கடுகதி புகையிரதம் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குளியாப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 37வயதான கோப்ரல் சமன்குமார என்ற இராணுவ வீரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7,30)

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 19/04/2022 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1085 |

வெற்றி இலக்கங்கள்: O 15 15 22 30 60

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 2022.04.19 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 046 |

வெற்றி இலக்கங்கள்: தனுசு 06 09 24 26 தனுசு

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2022/04/19 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4737 |

வெல்லப்பட்ட இலக்கங்கள்: X 9 3 1 2 8 1

### தன நிதானய

திகதி -2022.04.19

சீட்டிழுப்பு இலக்கம் - 767

M 18 30 32 43

## பேருந்து கட்டண...

பேருந்து கட்டணங்கள் 35 சதவீதத்தால் அதிகரிப்படுவதாக அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் குறைந்தபட்ச கட்டணம் 27 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் குறித்த கட்டண அதிகரிப்பு நடைமுறைக்கு வரவுள்ளது. (ம-7)

## 37 வகையான...

குறிப்பிட்ட சில வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படவிருந்த அவசரமற்ற சத்திர சிகிச்சைகள் ஒத்திவைக்கப்பட உள்ளதாகவும் மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை சமாளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

வைத்தியசாலை கட்டமைப்பில் இல்லாத மருந்துகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தினார். (ம-7)

## பரீட்சைகள்...

பிரதி கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## 300க்கும்...

களின் ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இன்று முதல் இம்மாதம் 28ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து நகரங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## இலங்கைக்கான...

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவுடன் நேற்று செவ்வாய்க்கிழமை வோஷிங்டனில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இவ்வாறு இலங்கைக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை இலங்கை எதிர் கொண்டுள்ள கடினமான பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்தியா வழங்கி வரும் உதவிகள் குறித்தும் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவிற்கு, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கமளித்துள்ளார்.

நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டதற்கமைய, சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்தும் இலங்கையுடன் தீவிரமாக ஒன்றித்து செயற்படும் என்று அதன் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியா உறுதியளித்துள்ளார். (ம-7)

## பொலிஸாரின்...

எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்தும், ஜனாதிபதி மற்றும் அரசு பதவி விலக வலியுறுத்தியும் நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் நேற்று போராட்டங்கள் நடைபெற்றன.

வீதிகள், ரயில் பாதைகளை மறித்தும், ரயர்களைக் கொளுத்தியும் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் ரம்புக்கனை பிரதேச மக்கள் நேற்று அரசாங்கத்திற்கு எதிராக வீதிகளை மறித்து, ரயர்களை எரித்தும் புகையிரத பாதைகளை மறித்தும் போராட்டம் நடத்தினர்.

இதனால் பல பகுதிகளில் பேருந்துகள் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நடைபெற்ற மோதலிலேயே ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானதுடன், 24 பேர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ கூறுகையில்,

ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்ட போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரை நோக்கி கற்களை வீசி தாக்குதல் நடத்தியதுடன் அங்கு தரித்து நின்ற எண்ணெய் பவுசருக்கும் தீ வைக்க முற்பட்டனர்.

இதனையடுத்து, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிலர் காயமடைந்துள்ளதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலில் பொலிஸாரும் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், அப்பகுதியில் அமைதியை பேணுவதற்கு பொலிஸார் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இராணுவமும் குறித்த பகுதிக்கு வரவழைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ம-7)

## ஐ.நா, அமெரி...

யின் முன்னாள் கிரிக்கெட் தலைவர் மஹேல ஜெயவர்த்தனவும் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

அரசியல் பிரமுகர்களும் குறித்த சம்பவத்துக்கு தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

மேலும் இதேவேளை, ரம்புக்கனை சம்பவத்தை தான் வன்மையாக கண்டிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டுமுதல் தமது ஐந்து வருட ஆட்சியில், நிராயுதபாணியான பொதுமக்கள் மீது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாக்குதல்கள் மேற் கொள்ளப்படவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, எந்தத் தரப்பில் இருந்தாலும் தீர்வுகளுக்கு வன்முறை வழியாகாது என முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவிலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ரம்புக்கனையில் நிராயுத பாணியான மக்கள் மீது மிலேச்சத்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமையை தாம் வன்மையாக கண்டிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு நாட்டு மக்களுக்கு உரிமை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரம்புக்கனை சம்பவம் ஒரு மனித படுகொலையாகும் எனவும், அதனை வன்மையாக கண்டிப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

தமது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை வன்மையாக கண்டிப்பதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தமது உத்தியோகப்பூர்வ பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

### SUPER BALL

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 1714 | நிறம் | இள் நீலம் |
| சீட்டிழுப்பு திகதி | 2022 / 04 / 19 | தினம் | செவ்வாய் |

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: Q 18 38 53 61

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 57,712,739/-

### சனிதா

செவ்வாய்க்கிழமை

சீட்டிழுப்பு திகதி: 2022.04.19

சீட்டிழுப்பு இல: 3875

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,947,960/-

வெற்றி இலக்கங்கள்: 04 09 39 44 K

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 160

சீட்டிழுப்பு திகதி 19.04.2022

செவ்வாய்க்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 03 36 37

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,909,600/-

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,575,988/-

திகதி 2022-04-19

சீட்டிழுப்பு வாரம் 3426

வர்ணம் சிவப்பு

வெற்றி இலக்கங்கள்: 26 31 45 50 மகரம்

3 5 9 4 5 0 4

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,360,300/-

### 12

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: K 29 04 16 28 55

சீட்டிழுப்பு வாரம் 890

2022.04.19 செவ்வாய்க்கிழமை

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 231,418,153/-

### அத கோடிபதி

செவ்வாய்க்கிழமை

சீட்டிழுப்பு இல: 1540

வர்ணம்: இளநீலம்

சீட்டிழுப்பு திகதி: 2022.04.19

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,691,940/-

வெற்றி இலக்கங்கள்: 03 46 48 72 I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக

## இலங்கை, இந்திய நிதி அமைச்சர்கள் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் சவால்களை எதிர்கொள்வதற்கான அணுகுமுறைகள் குறித்து இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் நிதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கிடையில் வொஷிங்டனில் இடம்பெற்ற சந்திப்பின்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன்(IMF) கலந்துரையாடலில் ஈடுபடும் நோக்கில் நிதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு 17 ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்டனர்.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகர் நோக்கிச் சென்ற இந்த பிரதிநிதிகள் குழுவில் மத்திய வங்கி ஆளுநர், பேராசிரியர் நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்தன உள்ளிட்ட நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகளும் உள்ளடங்கியுள்ளனர்.

இந்நிலையிலேயே, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் நிதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி உள்ளிட்ட பிரதிநிதிகள் சந்திப்பை மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். (ம-7)

# கலவரத்தை உருவாக்க அரசு முயற்சிக்கின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

நாடு முழுவதும் மக்கள் அமைதியான போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுவரும் நிலையில் இதற்கிடையே அரச சார்பு கூட்டாளிகள், தரகர்கள் மற்றும் அரச பயங்கரவாதிகளை உட்புகுத்தி கலவரத்தை உருவாக்க அரசு முயற்சித்து வருகின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச பயங்கரவாதம் மக்கள் போராட்டத்தில் கைவைத்து துன்புறுத்தினால் அவர்களைப் பாதுகாக்க ஒட்டுமொத்த எதிர்க்கட்சியினரும் ஒன்றிணைந்து அந்த இடங்களுக்குச் செல்வார்கள் என்றார். (ம-7)

# அனைவரும் குற்றவாளியாக மாறுவதை தடுக்க முடியாது

## சபையில் விமல் வீரவன்ச

(கொழும்பு)

நாட்டில் நிலவும் ஸ்திரமற்ற தன்மையை சீரமைக்கக்கூடிய இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் பதவிவிலக வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இல்லாவிடில் நாட்டுக்கு ஏற்படப்போகும் துரதிஷ்டவசமான தலைவிதியின் குற்றவாளிகளாக நீங்கள் அனைவரும் மாறுவதை தடுக்க முடியாது என அவர் நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையின்போது தெரிவித்தார்.

நெருக்கடி நிலை காரணமாக வீதியில் இறங்கிய மக்களின் போராட்டங்களுக்கு உரிய மரியாதை வழங்கி இந்த தருணத்தில் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


**மணிவிழா வாழ்த்துக்கள்**



திரு. சின்னத்தம்பி பவளகுமாரன் SLPS - I
(அதிபர் - யா/நாவற்குழி மகா வித்தியாலயம்)
கல்விப்புலத்தில்
ஆசிரியர் பணி
1985 - 2002 வரை
அதிபர் பணி
01.01.2002 - 20.04.2022 வரை
யா/ நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பணிபுரிந்து 20.04.2022 இன்று மணிவிழா காணும் அதிபருக்கு எமது வாழ்த்துக்கள்.
வாழ்த்துவோர் : தென்மராட்சி அதிபர் சங்கம்
(11091)

**பதவி வெற்றிடம்**
வெளிக்கள உதவியாளர் : 01 (ஆண்)
உற்பத்தி உதவியாளர்கள் : 03 (இருபாலாரும்)
நேர்முகத் தேர்வு : கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம், இலக்கம் - 290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
22.04.2022 காலை 10.00
karuvi.org@gmail.com
077 324 6876, 077 229 2401
(11080)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
- சுண்டிக்குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் தென்னைகள் உள்ளன.

தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
ஒரு பரப்பின் விலை ரூ.450,000
ஜெயம் - 077 814 7389
077 241 7589
(11088)

**ஊர் கோழிக் குஞ்சுகள்**
1 நாள் ஊர் கோழிக் குஞ்சுகளை ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொள்ளலாம்.
விலை - 100/=
077 332 2433
பண்ணாகம்
(11090)

**பதவி வெற்றிடம்**
பாதுகாப்பு உத்தியோகத்தர்
(ஆண்கள் - இரவு, பகல் கடமை)
யாழ்.நகருக்கு அண்மையில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்கள் மட்டும் (வயது: 30 - 60)
தொடர்பு:- 076 097 3121

**தவறிவிட்டது**
NP MO 9862 எனும் இலக்க மோட்டார் சைக்கிள் புத்தகம் யாழ்ப்பாணத்திற்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்புகொள்ளவும்.
077 895 2391
(C-4200)

**வேலை வாய்ப்பு**
இலங்கையில் முன்னணி நிறுவனமான WEC நிறுவனம் வட மாகாணத்தில் புதிய கிளைகளிற்கு பல்வேறுபட்ட அலுவலக ரீதியான பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளது.
தகைமை
- 10, O/L, A/L, மேலதிக தகைமையுடையோர்.
- சம்பளம் நேர்முகத் தேர்வில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- தங்குமிடம், உணவு வசதியுண்டு.

புதிய கிளை ஆரம்பிக்கப்படவுள்ள இடங்கள்
மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம்
077 298 6763, 076 888 9384
(11039)

**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)**
24.04.2022 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பும் தவிர்க்க முடியாத காரணத்தினால் 08.05.2022 ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.
காலம் : 08.05.2022(ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : வருடாந்த பொதுக்கூட்டம் - மு.ப 10.00 மணி
நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பு - பி.ப 1.00 மணிமுதல் 4.00 மணிவரை
இடம் : பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்
பா. செந்தில்குமார்
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.
(C-4201)

**விற்பனையாளர் தேவை**
கொடிகாமம் எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக லொத்தர் ரிக்கற் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
076 717 3297
(C-4199)

**சிறுநீரகம் தேவை**
O,B
இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
076 239 9874
(11057)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.